//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No:CC.No.171/2022**

**prosecution witness: PW-6**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

A1, A2 Present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஸ்குமார் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**13.03.2024**

**முதல் விசாரணை:-**

1.நான் தற்போது ஏர்வாடி தர்கா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.08.2021ம் தேதி 19.00 மணிக்கு இராமேஸ்வரம் நகர் காவல்நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது இராமேஸ்வரம் செம்மமடத்தை சேர்ந்த ஆரோக்கியஜெயராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப் பெற்று அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக்குற்ற எண்.237/2021, பிரிவுகள்.454, 380 இதச ஆக வழக்கு பதிவுசெய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.

2. முதல் தகவல் அறிக்கை அசலையும், புகார் மனுவையும் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே இரவு 20.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜு, இராமநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வை மகஜர் தயார் செயதேன். அந்த பார்வை மகஜர், அ.சா.ஆ.4 ஆகும். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.

3.பின்பு சாட்சிகள் ஆரோக்கியஜெயராஜ், மரிய விஜிதா, அந்தோணி விக்னேஷ், ராஜு, இராமநாதன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் 17.10.2021ம் தேதி பகல் 12.00 மணிக்கு இராமேஸ்வரம் பொந்தம்புளியில் வாகனசோதனை செய்து கொண்டிருந்தபோது TN 65 AP 1710 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த பெரியபள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த அசோகன் மகன் சரவணன் என்பவரை விசாரிக்க அவர் வாகனத்தில் பவுச்சில் இருந்த நகைகளை ப்ற்றி விசாரித்தபோது முண்ணுக்குபின் பேசியவர் பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் என்னிடம்கொடுததார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 6 ஆகும். பின்பு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தனது வீட்டில் இருந்து எடுத்து ஆஜர்படுத்திய கருப்பு நிற dell laptop ஐ அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் ராஜ், மைக்கேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5.பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை நிலையம்கொண்டு வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்தை படிவம்–95 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம்–95 அ.சா.ஆ,.8 ஆகும். பின்னா ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியின் மனைவியான பாரதி என்பவரை வழக்கின் குற்றவாளியாக சேர்த்து வழக்கின் சட்டப்பிரிவுகளை .454, 380 இதசலிருந்து பிரிவுகள். 454, 380, 411 இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும்.

6. இவ்வழக்கின் 2ம் எதிரி மாண்புமிகு சென்னை உயர்நிதிமன்ற மதுரை கிளையில் முன்ஜாமீன்பெற்றுள்ளார். ஆரோக்கியஜெயராஜ், மரிய விஜிதா, அந்தோணி விக்னேஷ் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

7. இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள். 454, 380, 411 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1.புகாரானது மாலை 07.00 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால்

சரிதான். நகர் காவல்நிலையத்தில் இருந்து சம்பவ இடம் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். புகாரில் பொருட்களை காணவில்லை என்ற விபரம் பகல் 01.00 மணிக்கு தெரிந்ததாக புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2. எனது விசாரணையில் புகாரினை யார் எழுதியது என்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை வரும்போது புகாரை எழுதித்தான் கொண்டு வந்தார். புகாரினை புகார்தாரர் எழுதியிருநதால் இடம்விடாமல் எழுதி இப்படிக்கு என்று கையொப்பம் செய்வது தான் வழக்கம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் சுமார் 6 வரி எழுதும் அளவிற்கு வெற்றிடமாக உள்ளது என்றால் சரிதான். அதற்கு கீழ் இப்படிக்கு என்று கையொப்பம் பெறப்பட்டுள்ளது. அந்த இடைவெளியை நிரப்புவதற்காக அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. எழுதாத வெள்ளை பேப்பரில் புகார்தாரரிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு பின்னிட்டு இந்த வழக்கிற்கு தோதாக நானே புகாரினை எழுதினேன் என்றால் சரியல்ல. முதல் தகவல அறிக்கை 13.08.2021ம் தேதி அன்றே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பினேன் என்றால் 17.08.2021ம் தேதி அனுப்பியுள்ளேன்.

4. நான் சொன்னது போல் யாரிடமும் வாக்குமூலமோ, மறுவாக்குமூலமோ வாங்கிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மகஜர், வரைபடம் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்வில்லை, அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த குற்றத்திற்கும் எநத் சம்பந்தமும் இல்லை, முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒம்/–S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்